# பள்ளி கல்வித்துறை – விழுப்புரம் மாவட்டம்
# மேல்நிலை இரண்டாம் ஆண்டு – காலாண்டுத் தேர்வு – 2024
# பாடம் : தாவரவியல் – விடைக்குறிப்பு

**I. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 15 x 1=15

| வி.எண் | பகுதி – I | | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | ஈ) | அகரோஸ் இழும மின்னாற் பிரிப்பு | 1 |
| 2 | இ) | உயிரி பாதுகாப்பு | 1 |
| 3 | இ) | அ–ii, ஆ–iii, இ–i, ஈ–iv | 1 |
| 4 | ஈ) | பெரிஸ்பெர்ம் | 1 |
| 5 | ஆ) | 2 செல் நிலை | 1 |
| 6 | இ) | i - ஆ, ii - ஈ, iii - அ, iv – இ | 1 |
| 7 | இ) | GAATTC | 1 |
| 8 | இ) | கனியின் நீளம் | 1 |
| 9 | இ) | பொன்நிற அரிசி – விட்டமின் K | 1 |
| 10 | இ) | UAG, UGA – நிறுத்தம் | 1 |
| 11 | ஈ) | இணை சேர்தல், நான்கமை உருவாதல், குறுக்கேற்றம் மற்றும் முடிவுறுதல் | 1 |
| 12 | அ) | மைட்டோகாண்ட்ரியா மற்றும் பசுங்கணிகங்கள் | 1 |
| 13 | ஆ) | கூற்று சரி. காரணம் தவறு. | 1 |
| 14 | இ) | திரவ நைட்ரஜனைப் பயன்படுத்தி மிக குறைந்த வெப்பநிலையான –196°C க்கு உட்படுத்துவது. | 1 |
| 15 | அ) | 10 மைக்ரோமீட்டர் | 1 |

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 24 கட்டாயம் விடையளிக்கவும்** 6 x 2 =12

| | பகுதி – II | |
|---|---|---|
| 16. | **கொல்லும் மரபணுக்கள்**<br>உயிரினத்தைக் கொல்லும் திறனுடைய அல்லீல்களுக்கு கொல்லும் மரபணுக்கள் என்று பெயர்.<br>எ.கா : ஆன்டிரைனம். | 2 |
| 17. | ➢ உருளைக்கிழங்கு பதப்படுத்தப்படும் தொழிற்சாலைகளிலிருந்து கிடைக்கும் கழிவுநீர்<br>➢ வைக்கோல்<br>➢ வெல்ல சக்கைப்பாகு<br>➢ விலங்கு உரம் மற்றும்<br>➢ கழிவு நீர் **(ஏதேனும் 3)** | 2 |
| 18. | **கான்தோரஃபில்லி**<br>வண்டுகளின் மூலம் நடைபெறும் மகரந்தச்சேர்க்கை. | 2 |
| 19. | **ஆமணக்கு அருணா.**<br>➢ சடுதி மாற்ற ஆமணக்கு தாவரம் – ஆமணக்கு அருணா.<br>➢ ஆமணக்கு விதைகள் பொதுவாக 270 நாட்களில் முதிர்ச்சியடைகின்றன, வெப்ப நியூட்ரான்களை செலுத்தும் போது 120 நாட்களில் முதிர்ச்சி அடைகின்றன. | 1<br>1 |
| 20. | **பல் கருநிலை**<br>➢ ஒரு விதையில் ஒன்றுக்கு மேற்பட்ட கரு காணப்பட்டால் அதற்கு பல்கரு நிலை என்று பெயர். | 2 |
| 21. | **மெண்டலியத்தை மறு ஆய்வு செய்த அறிஞர்களின் பெயர்கள்**<br>ஹியூகோ டீவிரிஸ்<br>கார்ல் காரென்ஸ்<br>எரி வான் ஷெர்மாக் | 2 |
| 22. | **மரபணு மாற்றத்திற்கு பயன்படுத்தப்படும் வேதிப்பொருட்கள்**<br>பாலி எத்திலீன் கிளைக்கால்<br>டெக்ஸ்ட்ரான் சல்ஃபேட் | 1<br>1 |

Padasalai.Net

**23.** **TATA பேழை**

படியெடுத்தல் நிகழ்விற்கு DNA யில் உள்ள ஒரு குறிப்பிட்ட காரவரிசை முன்னியக்கியாக (promoter) செயல்படுகிறது. இது TATA என்று அமைந்த காரவரிசையாகும். — 2

**24.** **சைபிரிட்**

வேறுபட்ட செல்களின் உட்கரு அற்ற புரோட்டோபிளாஸ்ட்டை இணைத்துப் பெறப்படுவது சைபிரிட். — 2

## பகுதி – III

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்**
**வினா எண் 33 கட்டாயம் விடையளிக்கவும்** — 6 x 3 =18

**25.** **சுரப்பு டபீட்டம் / புறப்பக்க செல் வகை**

தோற்றநிலை, செல்லமைப்பை தக்கவைத்து கொண்டு நுண்வித்துகளுக்கு ஊட்டமளிக்கின்றன. — 1 1/2

**ஊடுருவும் டபீட்டம் / பெரிபிளாஸ்மோடிய வகை**

இவ்வகை டபீட்டத்தின் செல்கள் உட்புற கிடைமட்டசுவர்களையும், ஆரச்சுவர்களையும் இழந்து அனைத்து புரோட்டோபிளாஸ்ட்களும் ஒன்றிணைந்து பெரிபிளாஸ்மோடியத்தை உருவாக்குகின்றன. — 1 1/2

**26.** **நுனி மூடல்**

முதல் நிலை RNA படியின் (hnRNA) 5' முனையில் மெத்தில் குளுக்கோசைன் டிரைபாஸ்ஃபேட் கொண்டு செய்யப்படும் சில மாற்றங்கள். — 1 1/2

**வால் உருவாக்கம்**

hnRNA ( முன்னோடி mRNA ) வின் 3' முனையில் எண்டோநியூக்ளியேஸ் நொதியைக் கொண்டு பிளந்து அவ்விலக்கில் அடினைன் நியூக்ளியோடைட்கள் பலவற்றை (Poly A) இணைப்பதற்கு வால் உருவாக்கம் அல்லது பாலி அடினைலேஷன் என்று பெயர். — 1 1/2

**27.**




(ஏதேனும் 4 பாகங்கள்)

படம் - 2
பாகம் - 1

**28.** **மெண்டலின் ஏழு வேறுபட்ட பண்புகள்** — 3

| வ.எண் | பண்பு | ஓங்கு பண்பு கூறு | ஒடுங்கு பண்பு கூறு |
|---|---|---|---|
| 1. | தாவர உயரம் | நெட்டை | குட்டை |
| 2. | கனி வடிவம் | வீங்கியது / உப்பியது | இறுக்கியது |
| 3. | விதை வடிவம் | உருண்டை | சுருங்கியது |
| 4. | விதையுறை நிறம் | மஞ்சள் | பச்சை |
| 5. | மலர் அமைவிடம் | கோணம் | நுனியிலமைந்த |
| 6. | மலர் நிறம் | ஊதா | வெள்ளை |
| 7. | கனி நிறம் | பச்சை | மஞ்சள் |

**29.** **பல்வேறு வகை ஒற்றியெடுப்பு தொழில்நுட்பம்** — 3

| | சதர்ன் ஒற்றியெடுப்பு | நார்தர்ன் ஒற்றியெடுப்பு | வெஸ்டர்ன் ஒற்றியெடுப்பு |
|---|---|---|---|
| பெயர் | கண்டுபிடிப்பாளரின் பெயர் சதர்ன் ஆகும் | நார்தர்ன் என்பது ஒரு தவறான பெயராகும். | வெஸ்டர்ன் என்பது ஒரு தவறான பெயராகும். |
| பிரிக்கப்படுவது | DNA | RNA | புரதங்கள் |
| இயல்பிழத்தல் | தேவைப்படுகிறது | தேவையில்லை | தேவைப்படுகிறது |
| சவ்வு | நைட்ரோசெல்லுலோஸ் / நைலான் | அமினோ பென்சைலாக்சி மெத்தில் | நைட்ரோசெல்லுலோஸ் |
| கலப்புறுத்தம் | DNA - DNA | RNA - DNA | புரதம் – எதிர்ப்புரதம் |
| காட்சிப்படுத்துதல் | கதிரியக்கபடம் | கதிரியக்கபடம் | இருள்அறை |

Padasalai.Net

**30.** **உறை குளிர் பாதுகாப்பு** — 3

- புரோட்டோபிளாஸ்ட்கள், செல்கள், திசுக்கள், செல் நுண்ணுறுப்புகள், செல்லுக்கு வெளியே உள்ள பொருள்கள், நொதிகள் போன்றவற்றை –196°C திரவ நைட்ரஜனைப் பயன்படுத்தி மிகக்குறைந்த வெப்பநிலையில் குளிர வைத்து பதப்படுத்துவதே உறை குளிர் பாதுகாப்பு என்று அழைக்கப்படுகிறது.

**31.** — 3

| தவறுதலாக பொருள்படும் சடுதி மாற்றம் | பொருளுணர்த்தாத சடுதி மாற்றம் |
|---|---|
| ஒரு அமினோ அமிலத்திற்கான ஒரு மரபுக்குறியனை வேறொரு அமினோ அமிலத்திற்கான மரபுக்குறியனாக மாற்றியமைக்கப்படும் சடுதிமாற்றம். | முடிவு அல்லது நிறுத்துக்குறியனாக மாற்றமடையும் நிகழ்வு / (UAA, UAG, UGA) |

**32.** **அறிவுசார் சொத்துரிமை**

- அறிவுசார் சொத்துரிமை என்பது ஒரு வகை சொத்து ஆகும். — 1
- பிரித்தறிய முடியாத மனித அறிவின் படைப்புகள், பதிப்புரிமம், காப்புரிமம், மற்றும் வணிக முத்திரை போன்றவற்றை உள்ளடக்கியதாகும். — 1
- பிற வகை உரிமைகளான வணிக ரகசியங்கள், விளம்பர உரிமைகள், தார்மீக உரிமைகள் மற்றும் நேர்மையற்ற போட்டிகளுக்கு எதிரான உரிமைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். — 1

**33.** **pBR322– வரைபடம்** — படம் - 2, பாகம் - 1

pBR 322 பிளாஸ்மிட்




**பகுதி – IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** — 5 x 5=25

**34.** **சூலின் அமைப்பு – விளக்கம்** — 3, படம் – 2




**34. (அல்லது)** **தாவர திசு வளர்ப்பில் அடங்கியுள்ள அடிப்படைக் கொள்கைகள்**

**முழு ஆக்குத்திறன்**

- உயிருள்ள தாவரச் செல்களை ஊட்ட கரைசல் உள்ள ஊடகத்தில் வளர்க்கும் போது முழுத்தாவரமாக வளர்ச்சியடையும் பண்பு. — 2

**வேறுபாடுறுதல்**

- செல்களில் உயிரியல், வேதியியல் மற்றும் அமைப்பியல் ரிதியாக மாற்றங்களை ஏற்படுத்தி, அமைப்பு மற்றும் பணியினை மேற்கொள்ளச் செய்வதே வேறுபாடுறுதல் எனப்படும். — 1

**மறு வேறுபாடுறுதல்**

- ஏற்கனவே வேறுபாடுற்ற ஒரு செல் மேலும் வேறுபாடுற்று மற்றொரு செல்லாக மாற்றமடைவது மறு வேறுபாடுறுதல் எனப்படும். — 1
- **எ.கா :** கேலஸ் திசு முழுத்தாவர அமைப்பை உருவாக்கும் திறன் பெற்றுள்ளதை மறுவேறுபாடுறுதல் எனலாம்.

**வேறுபாடிழத்தல்**

- முதிர்ச்சி அடைந்த செல்கள் மீண்டும் ஆக்குத்திசுவாக மாறிக் கேலஸ் போன்ற திசுவை உருவாக்கும் நிகழ்ச்சி வேறுபாடு இழத்தல் என அழைக்கப்படுகிறது. — 1

**35.** **முழுமையற்ற ஓங்குத்தன்மை** — 1

எ.கா : அந்தி மந்தாரை / மிராபிலஸ் ஜலாபா

**விளக்கம் (அல்லது) வரைபடம்**

| | | |
|---|---|---|
| **பெற்றோர்** | **சிவப்பு** $R^1R^1$ | **வெள்ளை** $R^2R^2$ |
| கேமீட்டுகள் | $R^1$ | $R^2$ |

$F_1$ = $R^1R^2$ (இளஞ்சிவப்பு)

$F_1$ (தற்கலப்பு) = $R^1R^2$ x $R^1R^2$ — 3

கேமீட் $R^1$ $R^2$ $R^1$ $R^2$

$F_2$ =

| கேமீட் | $R^1$ | $R^2$ |
|---|---|---|
| $R^1$ | $R^1R^1$ சிவப்பு | $R^1R^2$ இளஞ்சிவப்பு |
| $R^2$ | $R^1R^2$ இளஞ்சிவப்பு | $R^2R^2$ வெள்ளை |

மரபணுவாக்க விகிதம் : 1 : 2 : 1 — 1

**35. (அல்லது)** **தாங்கிக்கடத்திகள் இல்லாத மரபணு மாற்றம்**

- ஆம். — 1

**வேதியியல் வழி மரபணு மாற்றம்**

- பாலி எத்திலீன் கிளைக்கால் மற்றும் டெக்ஸ்ட்ரான் சல்ஃபேட் போன்ற சில வேதிப் பொருட்கள்.

**நுண் உட்செலுத்துதல்**

- DNA வை நேரடியாக கண்ணாடி ஊசி அல்லது நுண் பிப்பெட்டினைப் பயன்படுத்தி உட்கருவினுள் உட்செலுத்தப்படுகிறது.

**மின்துளையாக்கம்**

- புரோட்டோபிளாஸ்ட் செல்கள் அல்லது திசுக்களுக்கு உயர் மின்அழுத்த விசை கொடுக்கப்படுகிறது. இதனால் பிளாஸ்மாசவ்வில் தற்காலிக துளைகள் உண்டாகிறது.
- இந்த துளைகள் மூலம் அயல் DNA உள்ளெடுக்கப்படுகிறது. — 4

**லிப்போசோம் வழி மரபணு மாற்றம்**

- லிப்போசோம் என்பது செயற்கை பாஸ்போ லிப்பிடு நுண்பையாகும்.
- DNA லிப்போசோமிலிருந்து, தாவரசெல்களின் நுண்பைகளுக்கு மாற்றப்படுகின்றது.
- மரபணு மாற்றத்தின் விளைவாக லிப்போசோம் மற்றும் காற்றுக்குமிழியின் டோனோபிளாஸ்ட் இணைகிறது. இந்த செயல்முறை லிப்போபெக்சன் என்று பெயர்.

**பையோலிஸ்டிக் முறை**

- தங்கம் அல்லது டங்ஸ்டன் (1 – 3 µm) துகள்களால் பூச்சு செய்யப்பட்ட அயல் DNA வை இலக்கு திசு அல்லது செல்களின் மீது துகள் துப்பாக்கியை பயன்படுத்தி அதிக விசையுடன் செலுத்தப்படுகிறது. **(ஏதேனும் 4 மரபணு மாற்றம்)**

**36.** **மரபணு வரைபடம்**

- மரபணுக்களின் அமைவிடத்தையும், தொலைவையும் குறிக்கும் திட்ட வரைபடமே மரபணு வரைபடம் எனப்படுகிறது. — 2

**மரபணு வரைபடத்தின் பயன்கள்**

- மரபணுக்களின் வரிசையைத் தீர்மானிக்கவும், மரபணுவின் அமைவிடத்தை அடையாளம் காணவும், மரபணுக்களுக்கு இடையேயான தொலைவைக் கணக்கிடவும் உதவுகிறது.
- இரு பண்பு கலப்பு மற்றும் முப்பண்பு கலப்புகளின் முடிவுகளைக் கணிக்கப் பயன்படுகின்றன. — 3
- குறிப்பிட்ட உயிரினத்தின் சிக்கலான மரபணுத்தன்மையை மரபியலாளர்கள் புரிந்து கொள்ளவும் இது உதவுகிறது.

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

| | | |
|---|---|---|
| **36.**<br>**(அல்லது)** | **காற்று மகரந்தச்சேர்க்கை மலர்களின் பண்புகள்**<br>➢ மலர்கள் தொங்கு கதிர் அல்லது கதிர் வகை மஞ்சரிகளில் காணப்படுகின்றன.<br>➢ பூவிதழ்கள் இன்றியோ அல்லது மிகவும் குன்றியோ காணப்படும்.<br>➢ மலர்கள் சிறியவை, தெளிவற்றவை, நிறமற்றவை, மணமற்றவை மற்றும் பூந்தேன் சுரக்காதவை.<br>➢ மகரந்தத்தாள்கள் எண்ணற்றவை, மகரந்தக்கம்பிகள் நீண்டவை, வெளிநோக்கி வளைந்தவை, மகரந்தப்பை சுழலக்கூடியவை.<br>➢ மகரந்தத்துகள்கள் அதிக எண்ணிக்கையில் உண்டாகின்றன.<br>➢ மகரந்தத்துகள்கள் சிறியவை, உலர்ந்தவை, எடை குறைவானவை. எனவே காற்றின் மூலம் நீண்ட தொலைவிற்கு இவற்றை எடுத்துச் செல்ல இயலும். **(ஏதேனும் 5)** | 5 x 1 = 5 |
| **37.** | **தனி செல் புரதம்**<br>➢ மனிதன் மற்றும் விலங்குகளுக்கு உணவாக பயன்படும் நுண்ணுயிரிகளின் உலர்ந்த செல்கள்.<br>**பயன்கள்**<br>➢ புரதத்திற்கு மாற்றாக பயன்படுகிறது.<br>➢ ஆரோக்கியமான முடி மற்றும் தோலுக்கான அழகுப் பொருட்களில் பயன்படுத்தபடுகின்றன.<br>➢ கோழி வளர்ப்பில் ஊட்டசத்து உணவாக பயன்படுத்தபடுகின்றன.<br>➢ பறவைகள், மீன்கள், கால்நடைகளுக்கு உணவாக பயன்படுத்தபடுகின்றன.<br>➢ காகிதம் மற்றும் தோல் தொழிற்சாலைகளில் நுரை நிலை நிறுத்தியாக பயன்படுகிறது.<br>➢ உணவு தொழிற்சாலைகளில் மணமூட்டியாகவும், சூப்புகள், தயார்நிலை உணவுகள் தயாரிக்கவும் பயன்படுகின்றன. **(ஏதேனும் 3)** | 2<br><br>3 |
| **37.**<br>**(அல்லது)** | **பசுங்கணிக மரபணு சார்ந்த பாரம்பரியம்**<br>எ.கா : 4 மணித்தாவரம் / அந்திமந்தாரை<br>**விளக்கம் (அல்லது) வரைபடம்**<br><br> | 1<br><br>4 |
| **38.** | **தாவரத் திசு வளர்ப்பின் பயன்பாடுகள்**<br>➢ உடல் கலப்பினமாதல் மூலம் மேம்பட்ட கலப்புயிரிகள் உற்பத்தி<br>➢ உறை சூழப்பட்ட கருக்கள் அல்லது செயற்கை விதைகள் தாவரங்களின் உயிரிப்பன்மத்தைப் பாதுகாக்க உதவுகிறது.<br>➢ ஆக்குத் திசு மற்றும் தண்டு நுனி வளர்ப்பின் மூலம் நோய் எதிர்ப்பு தாவரங்களை உற்பத்தி செய்தல்.<br>➢ களைக்கொல்லி சகிப்புத்தன்மை, வெப்பச் சகிப்புத்தன்மை கொண்ட, அழுத்தத்தை (இறுக்கத்தை) எதிர்க்கக்கூடிய தாவரங்களின் உற்பத்தி.<br>➢ குறைந்த காலத்தில் பயிர் மற்றும் வன மரச் சிற்றினங்களின் உற்பத்தி .<br>➢ இரண்டாம் நிலை வளர்சிதை மாற்றப் பொருள்கள் உற்பத்தி. (மருந்து உற்பத்தி, அழகு சாதனப் பொருள்கள் மற்றும் உணவு உற்பத்தி) **(ஏதேனும் 5)** | 5 |
| **38.**<br>**(அல்லது)** | **மூலக்கூறு மரபியலாய்வில் அராபிடாப்சிஸ் – மாதிரி தாவரம்**<br>**விளக்கம்**<br>**(ஏதேனும் 5 விடைக்குறிப்புகள்)** | 5 x 1 = 5 |

Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com